# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8035207

1. District மாவட்டம் : நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம் Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 3/2017 Date: நாள் 11-10-2017

2. (i) Act சட்டம்: குற்றவியல் நடைமுறைச் சட்டம் Sections பிரிவுகள்: 102/1 CrPC
(ii) Act சட்டம்: இந்திய தண்டனை சட்டம் Sections பிரிவுகள்: 109 IPC
(iii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(1)(d) r/w 13(2) PC Act
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 10-10-2017 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16-30 Hr Time to : நேரம் வரை 23-00 Hr
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11-10-2017 Time நேரம் 02-30 Hr
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Sub-Registrar office, Thiruvarur 30 km west
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Sub-Registrar office, South street Thiruvarur
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. சேகர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30-05-74 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் [illegible] ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. S. மகேஷ், வயது 40/17, s/o சோமசுந்தரம், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம் திருவாரூர்
2) திரு. N. மார்த்தாண்டன் s/o மணி, 2 ம் நிலை [illegible]
3) [illegible] s/o மாணிக்கவேல், அலுவலக உதவியாளர்
4) திரு. [illegible] s/o [illegible], அலுவலக உதவியாளர்
5) திரு K. செந்தில்குமார் s/o [illegible], சார்பதிவாளர் அலுவலகம்
6) திரு S. செந்தில்குமார் s/o சாமிநாதன், [illegible]
7) திரு G. தியாகராஜன் s/o கணபதி, [illegible] திருவாரூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
காலதாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

இல்லை.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :-</u>

இன்று 11.10.2017 ஆம் தேதி 02.30 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் திரு.S.மனோகரன் ஆகிய நான் பொறுப்பில் இருக்கும்போது மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் திருமதி.M.சுமதி, மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், தஞ்சாவூர் அவர்கள் கொடுத்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்த விபரம் வருமாறு : அனுப்புநர் திருமதி. M.சுமதி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். பொருள் திடீர் ஆய்வு - திருவாரூர் மாவட்டம் - திருவாரூர் சார்பதிவாளர் அலுவலகம் - 10.10.2017 அன்று திடீர் ஆய்வு செய்யப்பட்டது -அறிக்கை அனுப்புதல் - தொடர்பாக, திருவாரூர் மாவட்டம், திருவாரூர் சார்பதிவாளர் அலுவலகத்தை 10.10.2017 அன்று திடீர் ஆய்வு செய்தபோது மேற்படி அலுவலகத்தில் இருந்த திரு.S.பசுபதி, சார்பதிவாளர்

(தொடர்ச்சி தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11/10/17 C.R.C.-4 (Lib) Deputy Inspection Cell [signature] 11/10/2017

14. Signature / Thumb Impression of the Complainant /Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
Office Thanjavur.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11/10/2017 / 07-00 hrs

Name: பெயர் S. MANOHARAN
Rank: நிலை Inspector of Police
Vigilance & Anti-Corruption
Nagappattinam

இருக்கைக்கு எதிரே உள்ள பதிவறையில் தென்கிழக்கு மூலையில் அட்டைபெட்டி குப்பை தொட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கருப்பு நிற மணிபர்ஸில் இருந்த கணக்கில் வராத பணம் ரூ.2030/- ம், அதே பதிவறையில் இருந்த மேஜையின் மேல் இருந்த அ கணக்கு ரசீது புத்தக நகல்கள் 13.02.2017 முதல் 17.02.2017 வரை உள்ள ரசீது 372 முதல் 491 என்று எழுதப்பட்டிருந்த ரசீது தாள்களுக்கு இடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.3,820/- ம் மேலும் பதிவறையில் தென்மேற்கு பகுதியில் வடக்கு பார்த்து இருந்த இரும்பு பீரோவில் 2 வது ரேக்கில் தி சென்னை சில்க்ஸ் கும்பகோணம் என்று ஒரு பக்கத்திலும், ஸ்ரீகுமரன் தங்க மாளிகை என்று மற்றொரு பக்கத்திலும் அச்சிடப்பட்டிருந்த மஞ்சள் நிற கட்டைப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.10,000/- ம், மேலும் பதிவறையில் இருந்த திரு.K.செந்தில்குமார், சார் பதிவாளர், கூத்தாநல்லூர் என்பவரின் இடது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து சரியான முகாந்திரம் கூறாத பணம் ரூ.6,600/- ம், மேலும் பதிவறையில் இருந்த திரு.G.தியாகராஜன், த/பெ.கணபதி எண்.6 கீழ சன்னதி தெரு, திருவாரூர் என்பவர் தனது மேற்சட்டை பையில் வைத்திருந்த சிறிய நோட் புக்கில் மறைத்து வைத்திருந்த சரியான முகாந்திரம் கூறாத பணம் ரூ.800/- ம் ஆக மொத்தம் மேற்படி திடீர் சோதனையின்போது மொத்தம் ரூ.23,250/- ம் லஞ்சம் மற்றும் குற்றமுறு நடவடிக்கை மூலம் ஆவணங்களை பதிவு செய்ய வந்தவர்களிடம் திருவாரூர் சார் பதிவாளர் திரு.S.பசுபதி மற்றும் சார் பதிவாளர் அலுவலக ஊழியர்கள் கையூட்டு பெற்று அதை மறைத்து வைத்து சரியான முகாந்திரம் கூறாத பணம் என்று கருதப்பட்டு நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் கணினி அறையில் பணிபுரிந்த செல்வி.சுபாஷிணி, திருமதி.கவிதா, எல்காட் ஊழியர் திரு.P.ராஜேஷ்குமார், கணினி இயக்குபவர் மற்றும் திரு.S.ரமேஷ், இளநிலை உதவியாளர் ஆகியோர் சந்தேகப்படும்படியான நடவடிக்கைகள் மேற்கொண்ட தடயம் ஏதுமில்லை. எனவே இவர்கள்மீது நடவடிக்கை தேவை இல்லை என்பதையும், நடவடிக்கை மற்றும் மகசரில் உள்ள மற்ற சார் பதிவாளர் அலுவலக ஊழியர்கள் மற்றும் வெளி நபர்கள் மீது மேல்நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான திடீர் ஆய்வு நடவடிக்கை அறிக்கையினை இத்துடன் அனுப்பி வைத்துள்ளேன். தங்கள் உண்மையுள்ள, Sd/-திருமதி.M.சுமதி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் இன்று 10.10.2017-ந் தேதி மாலை 16.30 மணிக்கு திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தெற்கு வீதியின் வடபுறம் தெற்கு பார்த்த வாசல் உள்ள திருவாரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் திருமதி.M.சுமதி, மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், தஞ்சாவூர் என்பவர் தலைமையில் செய்யப்படும் திடீர் ஆய்வு நடவடிக்கை பின்வருமாறு. முன்னிலை:- 1) திரு.S.மனோகரன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம், 2) திரு.K.ராஜ்குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள், நாகப்பட்டினம் ஆகியோரது முன்னிலையில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது அதுசமயம் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலர்கள் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தார்கள். 1) திரு.S.பசுபதி, வயது 46/2017, த/பெ.சோமசுந்தரம், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருவாரூர், 2) திரு.M.பார்த்திபன், வயது 42/2017, த/பெ.மணி, உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருப்பூண்டி (பகராண்மை) சார் பதிவாளர் அலுவலகம், திருவாரூர், 3) செல்வி.சுபாஷிணி,

வயது 25/2017, த/பெ.பாண்டியன், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருவாரூர், 4) திரு.S.ரமேஷ் வயது 26/2017, த/பெ.செல்வராசு, இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருவாரூர், 5) திரு.துளசியப்பன் வயது 51/2017, த/பெ.பாண்டுரங்கன், பதிவுறு உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருவாரூர், 6) திரு.ரகுபதி, வயது 45/2017, த/பெ.சதாசிவம், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருவாரூர், 7) திருமதி.கவிதா, வயது 40/2017 க/பெ.ராமசாமி, அலுவலக கண்காணிப்பு கேமரா இயக்குநர், (தொகுப்பு ஊதியம்- எல்காட்) சார்பதிவாளர் அலுவலகம், திருவாரூர், 8) திரு.ராஜேஷ்குமார், வயது 35/2017 த/பெ.பார்த்திபன், கணினி இயக்குபவர் (Private person) சார்பதிவாளர் அலுவலகம், திருவாரூர், 9) திரு.K.செந்தில்குமார், வயது 42/2017 த/பெ கண்ணன், சார்பதிவாளர், கூத்தாநல்லூர், திருவாரூர் மாவட்டம் இணையதள வழி ஆவணபதிவு குறித்த ஒரு நாள் செயல் முறை பயிற்சி, 10) திரு.S.செந்தில்குமார், வயது 35/2017 த/பெ சாமிநாதன், 254 கீழ வீதி, பூவலூர், மயிலாடுதுறை (சார் பதிவாளர் திரு.பசுபதியின் கார் ஓட்டுநர், அலுவலகத்தினுள்ளே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவர்), 11) திரு.தியாகராஜன் வயது 48/2017 த/பெ கணபதி, எண்.6, கீழ சன்னதி தெரு, திருவாரூர் (வெளி நபர், அலுவலகத்தினுள்ளே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் தஞ்சாவூர் அவர்கள் தன்னையும் தன்னுடன் வந்த நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார்களையும், முதுநிலை வருவாய் ஆய்வாளரையும், அலுவலகத்தில் அப்போது ஆஜரில் இருந்த சார்பதிவாளர் திரு.S.பசுபதி அவர்களுக்கும் மற்ற நபர்களுக்கும் அறிமுகம் செய்து கொண்டு, திடீர் ஆய்வு செய்ததில், இன்றைய தினம் 10.10.2017 ந் தேதி சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரய சாசனம் 7 ம், உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு - 6 ம், அடமான பத்திரம் - 1 ம் மொத்தம் 14 ஆவணங்கள் (ஆவண எண்கள் 03570 முதல் 03582 மற்றும் P 00104) பதிவு செய்யப்பட்டதாகவும், மேற்படி ஆவணங்களுக்கு 'அ'' கணக்குப்படி ரூ.1,67,285/- ம் இந்திய முத்திரைச் சட்டம் 41 ன்படி ரூ.1,31,215/- உட்பிரிவு கட்டணமாக ரூ.340/- ம் குறுந்தகடு கட்டணம் ரூ.700/- ம் மொத்தம் ரூ.2,99,540/- வசூல் செய்யப்பட வேண்டும் அதில் ரூ.2,97,625/- வங்கி வரைவோலையாகவும் (வரைவோலை எண்கள் 407263, 407265, 407267, 407259, 407262, 407264, 407266, 407268, 159605, 159604, 407219, 407218, 159648, 407261, 407260, 407273, 407272, 407252, 577932, 577933, 407276, 407274), ரொக்கமாக ரூ.1,915/- ம் வசூல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு திருமணச்சட்டத்தின்படி ரூ.690/- வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இன்றைய கொடிநாள் தொகையாக ரூ.1,100/- ம் வசூல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கொடிநாள் தொகை வசூல் செய்யப்பட்டதற்கான ரசீதுக்கான அடிக்கட்டையில் யாரிடமிருந்து வசூல் செய்யப்பட்டது, யார் வசூல் செய்தது என்ற விபரமும், கையொப்பமும் இல்லாமல் இருந்தது. மேற்படி தொகை பணம் 1,100/-வைத்திருந்த பெட்டியில் கணக்குப்படி சரியாக இருந்தது. C கணக்குப்படி ரூ.28,872/- சரியாக இருந்தது. D கணக்குப்படி 24 வில்லங்க சான்று வேண்டிய மனுவும், 9 நகல் மனு மொத்தம் 33 சான்றுக்கு ரூ.9,713/- வசூல் செய்யப்பட்டது அதில் ரூ.9020/- (2*2000=4000, 9*500=4500, 5*100= 500, காசுகள் 5*2 =10, 2*4=8, 1*2 =2 மொத்தம்= ரூ.9020/-) மட்டும் இருந்தது. ரூ.693/- குறைவாக இருந்தது. மேற்படி பணம் தலைமை எழுத்தர் திரு.பார்த்திபன் வசம் இருந்தது. குறைவாக இருந்த பணம் சம்பந்தமாக விசாரிக்க, எவ்வாறு குறைந்தது என்று தெரியவில்லை என்று கூறினார். சார் பதிவாளரை விசாரிக்க அதற்கு பார்த்திபன்தான் பொறுப்பு என்று கூறினார். மேலும் நிலையான பணம் ரூ.250/- சரியாக இருந்தது.

பின்னர் சார் பதிவாளரிடம் தனிநபர் பண கையிருப்பு பதிவேடு பற்றி கேட்க திருவாரூர் சார்பதிவாளர் அலுவலக தொகுதி 3 பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பதிவேட்டில் சார்பதிவாளர் பசுபதியோ அல்லது தலைமை எழுத்தர் பார்த்திபனோ, இன்று 10.10.2017 ந் தேதி அவர்கள் வீட்டில் இருந்து எடுத்து வந்த அல்லது பணம் கொண்டுவந்திருந்த விபரத்தினை பதிவு செய்யவில்லை. இளநிலை உதவியாளர் ரமேஷ், கேமரா ஆபரேட்டர் கவிதா, அலுவலக உதவியாளர் ரகுபதி, உதவியாளர் சுபாஷிணி ஆகியோர் காலையில் கொண்டுவந்த தொகையை எழுதி கையெழுத்திட்டுள்ளனர். மேற்படி பதிவேட்டில் சார் பதிவாளரும் மற்றவர்களும் கொண்டுவந்த தொகையை எழுதாமல் விட்டதற்கு சரியான காரணம் கூறவில்லை. அதன் பின்னர் சார் பதிவாளர் இருக்கைக்கு எதிரே உள்ள பதிவறையில் சோதனை செய்தபோது உள்ளே தென்கிழக்கு மூலையில் அட்டைப்பெட்டி குப்பைத் தொட்டியை சோதனை செய்தபோது கருப்பு நிற மணிபர்ஸ் கிடந்தது, அதை சோதனை செய்ய 500 ரூபாய் நோட்டுக்கள் 4 ம், 20 ரூபாய் நோட்டு 1 ம், 10 ரூபாய் நோட்டு 1 ம் மொத்தம் ரூ.2030/- இருந்தது. அதைப்பற்றி சார் பதிவாளரிடம் விசாரிக்க அது யாருடையது என்று சரியான விளக்கம் அளிக்கவில்லை. எனவே மேற்படி தொகை ரூ.2030/- லஞ்சம் மற்றும் குற்றமுறு நடவடிக்கை மூலம் சார் பதிவாளர் மற்றும் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஊழியர்களால் ஆவணங்களை பதிவு செய்ய வந்தவர்களிடம் கையூட்டு பெற்று அதை மறைத்து வைக்கப்பட்ட பணம் என்று முடிவு செய்து, மேற்படி கருப்பு நிற மணிபர்சும், பணமும் நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் பதிவறையில் இருந்த மேஜையின் மேல் இருந்த அ கணக்கு ரசீது புத்தக நகல்கள் 13.02.2017 முதல் 17.02.2017 வரை உள்ள ரசீது 372 முதல் 491 என்று எழுதப்பட்டிருந்த ரசீது தாட்களுக்கு இடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.3,820/- (1*2000=2000, 1*500=500, 11*100=1100, 3*50=150, 1*20=20, 5*10=50 மொத்தம் ரூ3,820/-) இருந்தது. அதைப்பற்றி சார் பதிவாளரிடம் விசாரிக்க அது யாருடையது என்று சரியான விளக்கம் அளிக்கவில்லை. எனவே மேற்படி தொகை ரூ.3820/- லஞ்சம் மற்றும் குற்றமுறு நடவடிக்கை மூலம் சார் பதிவாளர் மற்றும் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஊழியர்களால் ஆவணங்களை பதிவு செய்ய வந்தவர்களிடம் கையூட்டு பெற்று அதை மறைத்து வைக்கப்பட்ட பணம் என்று முடிவு செய்து, மேற்படி ஆவணமும், பணமும் நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் பதிவறையில் தென்மேற்கு பகுதியில் வடக்கு பார்த்து இருந்த இரும்பு பீரோவில் 2 வது ரேக்கில் தி சென்னை சில்க்ஸ் கும்பகோணம் என்று ஒரு பக்கத்திலும், ஸ்ரீகுமரன் தங்க மாளிகை என்று மற்றொரு பக்கத்திலும் அச்சிடப்பட்டிருந்த மஞ்சள் நிற கட்டைப் பையை சோதணையிட அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.10,000/- (100*100=10,000) இருந்தது. அதைப்பற்றி சார் பதிவாளரிடம் விசாரிக்க அது தன்னுடைய சொந்தப்பை என்றும் அதில் உள்ள பணமும் தன்னுடையதுதான் என்று விளக்கம் அளித்தார். ஆனால் மேற்படி பணத்தைப் பற்றி அலுவலகத்தில் யாரிடமும் சொல்லவில்லை என்றும், ஆய்வுக்குழுவினர் வரும்போதும் தான் பணம் வைத்திருப்பதை சொல்லாததற்கு காரணம் ஆய்வுக்குழுவினர் தேடி கண்டுபிடிக்கமுடியாது என்பதால் தான் அவர்களிடம் சொல்லவில்லை என்றும், தான்தான் அந்த கட்டைப்பையில் மறைத்து வைத்திருந்ததாகவும் கூறினார். மேற்படி பணத்திற்கு கணக்கு எதுவும் தன்னிடம் இல்லை என்றும் தெரிவித்தார் எனவே மேற்படி தொகை ரூ.10,000/- லஞ்சம் மற்றும் குற்றமுறு நடவடிக்கை மூலம் ஆவணங்களை பதிவு செய்ய வந்தவர்களிடம் சார் பதிவாளர் கையூட்டு பெற்று அதை மறைத்து

வைக்கப்பட்ட பணம் என்று முடிவு செய்து, மேற்படி மஞ்சள் நிற கட்டைப்பையையும், பணத்தையும் நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் பதிவறையில் இருந்த திரு.K.செந்தில்குமார், சார் பதிவாளர், கூத்தாநல்லூர் என்பவரிடம் விசாரிக்க, அவர் ஆன்லைன் பயிற்சிக்காக வந்ததாக தெரிவித்தார். அவரை விசாரித்த போது அவரின் மேற்சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்ஸில் இருந்து ரூ.2500/- (1*2000=2000, 1*500=500 மொத்தம் ரூ.2500/-) எடுத்து ஆஜர் செய்து தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னார். அவரின் விளக்கத்தை ஏற்றுக்கொண்டு மேற்படி பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரை விசாரித்தபோது தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.6,600/- (12*500=6000, 6*100=600 மொத்தம் ரூ.6,600/-)ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவர் இன்றைய தினம் திருவாரூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு கொண்டு வந்த பணம் சம்பந்தமாக சரியான முகாந்திரம் கூறவில்லை. மேலும் திருவாரூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டிலும் மேற்படி பணம் வைத்திருந்தது சம்பந்தமாக குறிப்பு எழுதவில்லை மேலும் திருவாரூர் சார் பதிவாளர் அவர்களிடமும் தான் பணம் கொண்டுவந்தது சம்பந்தமாக தெரிவிக்கவில்லை என்றும் கூறினார். மேலும் மேற்படி பணம் வங்கியில் இருந்து எடுத்ததற்கு எந்தவித ஆவணமும் தன்னிடம் இல்லை என்று கூறினார். எனவே மேற்படி தொகை ரூ.6600/- லஞ்சம் மற்றும் குற்றமுறு நடவடிக்கை மூலம் திருவாரூர் சார் பதிவாளர் திரு.பசுபதி ஆவணம் பதிவு செய்யும்போது லஞ்சம் பெற்று கூத்தாநல்லூர் சார் பதிவாளர் திரு.K.செந்தில்குமார் அவர்களிடம் கொடுத்து மறைத்து வைக்கப்பட்ட பணம் என்று முடிவு செய்து, மேற்படி பணத்தை நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் பதிவறையில் இருந்த திரு.G.தியாகராஜன், த/பெ.கணபதி எண்.6 கீழ சன்னதி தெரு, திருவாரூர் என்பவரை விசாரித்த போது அவர் தனது மேற்சட்டை பையில் வைத்திருந்த சிறிய நோட் புக்கையும் (Roja since 1989 Pocket Note Book)அதில் மறைத்து வைத்திருந்த ரூ.800/- (1*500=500, 3*100=300 மொத்தம் ரூ.800/-) ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரிடம் விசாரித்தபோது அவர் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஊழியர்களுக்கு அடிக்கடி வெளியில் சென்று டீ வாங்கி வந்து கொடுப்பதாக சொன்னார். அவரிடம் இன்றைய தினம் அவர் கொண்டு வந்த பணம் சம்பந்தமாக விசாரித்த போது அவர் எவ்வளவு பணம் கொண்டு வந்தார் என்று சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி தொகை ரூ.800/- லஞ்சம் மற்றும் குற்றமுறு நடவடிக்கை மூலம் திரு.G.தியாகராஜன் அவர்களால் மறைத்து வைக்கப்பட்ட பணம் என்று முடிவு செய்து, மேற்படி சிறிய நோட் புக்கையும், பணத்தையும் நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது மொத்தம் ரூ.23,250/- ஐ நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு அலுவலகத்தில் இருந்த திரு.S.ரமேஷ், இளநிலை உதவியாளரை விசாரித்தபோது அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்ஸில் இருந்து ரூ.110/- (1*100=100, 1*10=10 மொத்தம் ரூ.110/-) ஐ எடுத்து ஆஜர் செய்து தான் இன்று கொண்டு வந்த பணத்தில் சாப்பிட்டது போக மீதப்பணம் என்று கூறினார். அவரது விளக்கத்தை ஏற்று அந்த பணத்தை அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும் திரு.பார்த்திபன் உதவியாளரை விசாரித்தபோது அவர் தனது மேற்சட்டை இடது பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்ஸில் வைத்திருந்த ரூ.170/- (1*100=100, 1*50= 50, 2*10=20 மொத்தம் ரூ.170/-) ஐ எடுத்து ஆஜர் செய்து தான் இன்று கொண்டு வந்த பணம் என்றும், ஆனால் அரசு உத்தரவுப்படி கொண்டுவந்த தொகையை பதிவேட்டில் குறிக்கவில்லை என்று கூறினார். இருந்தபோதும், அவரது விளக்கத்தை ஏற்று அவரது பணத்ததை அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும் சுபாஷினி உதவியாளரை

விசாரித்தபோது அவர் தனது கைப்பையில் வைத்திருந்த ரூ.75/- (1*50=50, 2*10= 20, 1*5=5 மொத்தம் ரூ.75/-) ஐ எடுத்து ஆஜர் செய்து தான் இன்று கொண்டு வந்த பணம் ரூ.200/- ல் சாப்பிட்டது மற்றும் செலவு போக மீதம் என்றும், அரசு உத்தரவுப்படி கொண்டுவந்த தொகையை பதிவேட்டில் குறித்துள்ளதாகவும் கூறினார். அவரது விளக்கத்தை ஏற்று அந்த பணத்தை அவரிடமே கொடுக்கப்பட்டது. திரு.ராஜேஸ்குமார் என்ற வெளி நபர் கணினி அறையில் ரசீது போடுதல், பிரிண்ட் போடும் பணிகளை செய்து கொண்டிருந்தவரை விசாரித்தபோது அவர் தன்னை சார் பதிவாளர் மேற்படி கணினியில் பணி செய்வதற்காக அவரே தனது சொந்தப்பணத்தை கொடுத்து வேலைக்கு வைத்துள்ளதாகவும் வாரம் ரூ.3000/- சார் பதிவாளர் திரு.பசுபதி அவர்கள் கொடுப்பதாகவும், தான் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேல் வேலை பார்ப்பதாகவும் தெரிவித்தார். தான் சார் பதிவாளர் அறிவுரைப்படி சிஸ்டம் ஆப்பரேட்டராக வேலை பார்ப்பதாகவும் கூறினார். மேலும் கணினி அறையில் இருந்த திருமதி.J.கவிதா, க/பெ.ராமசாமி கேமரா ஆப்பரேட்டரை பற்றி விசாரிக்க அவரை ELCOT நிறுவனம் இந்த வேலைக்கு அமர்த்தியதாகவும், தனக்கு ரூ.7000/- தொகுப்பூதியமாக கொடுப்பதாகவும் கூறினார். அவரை விசாரிக்க அவர் தனது பழுப்பு நிற கைப்பையில் இருந்து ரூ.130/- (1*50=50, 3*20=60, 2*10=20 மொத்தம் ரூ.130/-) ஐ எடுத்து ஆஜர் செய்து தான் இன்று கொண்டு வந்த பணம் ரூ.200/- ல் சாப்பிட்டது மற்றும் செலவு போக மீதம் என்றும், அரசு உத்தரவுப்படி கொண்டுவந்த தொகையை பதிவேட்டில் குறித்துள்ளதாகவும் கூறினார். அவரது விளக்கத்தை ஏற்று அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.துளசியப்பன், பதிவுறு உதவியாளர் என்பவரை விசாரிக்க அவர் தனது மேல்பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.50/- ஐ எடுத்து ஆஜர் செய்து, மேற்படி பணம் தனது சொந்தப்பணம் என்றும் வீட்டில் இருந்து கொண்டுவந்தது என்று கூறினார். அவரது விளக்கத்தை ஏற்று மேற்படி பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் திரு.S.ரகுபதி, அலுவலக உதவியாளர் என்பவரை விசாரிக்க அவர் தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.55/- (2*20*40, 1*10= 10, 1*5=5 மொத்தம் ரூ.55/-) ஐ எடுத்து ஆஜர் செய்து தான் இன்று கொண்டு வந்த பணத்தில் செலவு போக மீதம் என்றும், அரசு உத்தரவுப்படி கொண்டுவந்த தொகையை குறித்துள்ளதாகவும் கூறினார். அவரது விளக்கத்தை ஏற்று அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.S.செந்தில்குமார், த/பெ.சாமிநாதன் எண்.254, கீழ வீதி, மூவலூர், மயிலாடுதுறை என்பவரை விசாரிக்க அவர் சார் பதிவாளர் பசுபதியின் தனிப்பட்ட காரின் ஓட்டுநர் என்றும், அவர் தான் சில்லறை காசுகள் மட்டுமே வைத்திருப்பதாக கூறினார். மேலும் திரு.G.சீனிவாசன், த/பெ.குருமூர்த்தி, தெற்கு மாட விளாகம் திருவாரூர் என்பவரை விசாரிக்க அவர் தான் முத்திரைத்தாள் விற்பனையாளர் என்றும், வாரம் ஒருநாள் முத்திரைத்தாள் விற்பனை பதிவேட்டினை சார்பதிவாளர் சரிபார்க்க அவரிடம் பதிவேட்டினை காண்பிக்க வந்ததாகவும். தனது மேல் சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.130/- (1*100*100, 1*20= 20, 1*10=10 மொத்தம் ரூ.130/-) ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கத்தை ஏற்று அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் திருவாரூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இன்று 10.10.2017 ல் பதிவு செய்யப்பட்ட மொத்த ஆவணங்கள் -14 (ஆவண எண்கள் 03570 முதல் 03582 மற்றும் P 00104) ன் True Image மற்றும் சார் பதிவாளர் அலுவலக தனி நபர் பண கையிருப்பு பதிவேடு 28.07.2017 முதல் 10.10.2017 வரை எழுதப்பட்டுள்ள பதிவேடு, கொடிநாள் ரசீது புத்தகம் (3971) ரூ.100/- க்கு போடப்பட்டதில் ரசீது எண்.397001 முதல் 397048 வரை ரசீது போடப்பட்டும், அடிக்கட்டையில்

யாரிடம் இருந்து பணம் வசூலிக்கப்பட்டது என்ற விபரமோ, சார் பதிவாளர் கையொப்பமோ இல்லாமல் உள்ளது மற்றும் ரசீது எண்கள்.397049 முதல் 397100 வரை படை வீரர் கொடிநாள் ரசீது போடப்படாமல் உள்ளது ஆகியவை நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் வருகைப்பதிவேடு 2017 ம் ஆண்டுக்கானது நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. அ கணக்கு, 41 கணக்கு, D கணக்கு, Sub Division கணக்கு, IP Camera கணக்கு ஆகியவை கணினியில் பதிவேற்றப்பட்டதின் நகல்கள், தமிழ்நாடு திருமணச்சட்டம் கட்டண பதிவேடு உண்மை நகல், G கணக்கு உண்மை நகல், H கணக்கு உண்மை நகல், Cash Book உண்மை நகல் மற்றும் கொடிநாள் நிதி வசூலிப்பது சம்பந்தமாக மாவட்ட பதிவாளரின் செயல்முறை ஆணையின் நகல்கள் ஆகியவை நடவடிக்கை மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி சார்பதிவாளரிடம் நிலுவையில் உள்ள ஆவணங்கள் பற்றி கேட்டபோது, நீதிமன்ற தடை மற்றும் மெய்த்தன்மை நிரூபிக்கப்படாமல் உள்ளதால் 28 ஆவணங்கள் நிலுவையில் உள்ளது என்றும் கூறினார். அவரிடம் மேற்படி நிலுவை ஆவணங்களை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் தனது அலுவலகத்தில் கடந்த ஒன்றரை வருடமாக CCTV Camera பழுதடைந்த நிலையில் உள்ளது என்றும், இதுவரை சரி செய்யப்படவில்லை என்றும் சார் பதிவாளர் கூறுகின்றார். இந்த திடீர் ஆய்வு நடவடிக்கை 10.10.2017 அன்று 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் நடவடிக்கை குறிப்பில் பக்கம் 1 முதல் 6 வரை ஒவ்வொரு பக்கத்தின் கடைசியிலும் மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் திருமதி.M.சுமதி, மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், தஞ்சாவூர், திரு.S.மனோகரன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம், திரு.K.ராஜ்குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் ஆகியோரும், 6 பக்கத்தில் திருவாரூர் சார் பதிவாளர் திரு.சோ.பசுபதி உடன் இருந்து நகல் பெற்றுக்கொண்டேன் என்று எழுதி கையொப்பமிட்டுள்ளார். மேற்படி புகாரின்மீது நாகப்பட்டினம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 3/2017 U/s.102 (1) Cr.P.C, 13(1) (d) r/w 13(2) of PC Act 1988 and 109 IPC ன்படி இன்று 11.10.2017 ஆம் தேதி காலை 02.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலானது வாதியின் அறிக்கை மற்றும் திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் மகசர் உடன் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது. மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

S. [signature] 11/10/2017

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்